முருகப்பெருமான் துணை

**மகான் வியாக்கிரமர் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.04.2021, சனிக்கிழமை

1. தவசியே தரும சக்தியே
தணிகாசலன் சித்தியாக வந்த
அவதார ஞானியே அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறைவிலா சார்வரி சேல் திங்கள்
இருபானோர் திகதி காரி வாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 21ம் நாள், 03.04.2021 சனிக்கிழமை)
இயம்பிடுவேன் வியாக்கிரமர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தொண்டர் படைகள்
ஞானமாக பிரணவக்குடிலிலிருந்து
நாடெங்கிலும் பெருகி வர
4. வருகவே மக்கள் சக்திக்குள்
வள்ளல் நெறி சூட்சுமமாகி
தருமமாக தயவாகப் பரவி
தன்னார்வம் மிக்க சேவைகள் பெருகி
5. பெருகியே ஞானிகளை வணங்கும்
பூசைகள் வழிபாடுகள் ஆகி
முருகப்பெருமான் அருளும் ஆசியும்
முழுமை ஞானம் ஆக மக்களுக்கு
6. மக்களுக்கு அரங்கன் வழி கிட்டி
மாற்றமும் ஏற்றமும் காணும்
ஆக்கமுடன் அன்னதானமதின்
அரங்கன் சேவை வளரவளர
7. வளரவே மக்களிடை தெளிவு
வளரும் தயவு வடிவமாக
தளரா சமத்துவ சமதர்ம
தனித்துவம் எங்கும் பரவி
8. பரவியே கலியின் துன்பங்கள்
பறந்தோடி உலகம் தன்னில்
குறைவிலா சமூக மாற்றம்
குருவருள்பட இனிதே நடந்தேறும்
9. தேற்றம் தரும் ஞான குருவே
தேவி அன்னபூரணி சக்தியாக
ஆற்றலான அன்னதானம்வளர்த்த
ஆறுமுக ஞானியே தேசிகனே

10. தேசிகனே உன் திருவடி பற்றி
தீட்சை பெற்ற மக்களிடை
ஆசியும் அருட்தயவும் பெருகி
ஆன்மீக ஞான ஆட்சிக் காலமாக

11. ஆகவே கலியுகம் மாறி
ஆறுமுகனார் ஞான யுகமாகும்
வகையான தரும நெறியால்
வழங்கிய யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–